**CLASS: M.A. TAMIL** **15A / 337**

**St. JOSEPH'S COLLEGE (AUTONOMOUS) TIRUCHIRAPPALLI – 620 002**

**SEMESTER EXAMINATIONS – APRIL 2015**

**TIME: 3 Hrs.** **MAXIMUM MARKS: 100**

| SEM | SET | PAPER CODE | TITLE OF THE PAPER |
|---|---|---|---|
| IV | 2013 | 12PTA4113 | சிற்றிலக்கியங்கள் |

## முதற்பாகம்

**அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக:** **20 x 1 = 20**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. பாதம் முதல் கூந்தல் முடியப் பாடப்படுவது
   அ) கேசாதிபாதம் ஆ) பாதாதிகேசம்
   இ) அலங்கார பஞ்சகம் ஈ) அரசன் விருத்தம்
2. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா, மலைத் தலைய கடற் காவிரி' - இவ்வரி இடம் பெறும் நூல்
   அ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ஆ) முக்கூடற்பள்ளு
   இ) திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் ஈ) குற்றாலக் குறவஞ்சி
3. 'ஆளிபோற் பாய்ந்தசுரும் பிசை கேட்கும்' – என்பதில் 'ஆளி' என்பதன் பொருள் யாது?
   அ) வண்டு ஆ) நாய்
   இ) சிங்கம் ஈ) பேய்
4. 'மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும் அன்னை முலைப் பாலினறிந்தோர்' – யார்?
   அ) திருஞானசம்பந்தர் ஆ) திருநாவுக்கரசர்
   இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
5. 'பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பது தான் சதகம்' என்று குறிப்பிடுவது
   அ) நவநீதப் பாட்டியல் ஆ) சுவாமிநாதப் பாட்டியல்
   இ) பன்னிரு பாட்டியல் ஈ) இலக்கண விளக்கப் பாட்டியல்

**கோடிட்ட இடத்தை நிரப்புக:**

6. பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு ________என்று பொருள்.

7. காயக் கண்டது ________.

8. ‘ஈப்புலி’ என்ற கேலிப் பெயரினை உடையவன் ________.

9. ‘பூமருவிய புவிமாதும்’ என்ற கீர்த்திக்கு உரியவன் ________.

10. ________ தமிழின் முதல் சதக நூல்.

**சரியா? தவறா? குறிப்பிடுக:**

11. சிற்றிலக்கியங்கள் 65 என வரையறுப்பது பன்னிரு பாட்டியல்.

12. கருடனைத் தமக்கு வாகனமாக உடையவன் சிவன்.

13. ‘உகிர் கொள்ளி’ என்பது நகம் களையும் கருவி.

14. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும், மிஞ்சப் புகட்ட வளர்ந்தது தமிழ்மொழி.

15. முதன் முதலில் எழுந்த சதக இலக்கியம் மன்னனைப் பாடியது.

**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 16. சிற்றிலக்கிய காலம் | - | அ) உண்மை |
| 17. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | - | ஆ) சிரிப்பு |
| 18. மூரல் | - | இ) குமரகுருபரர் |
| 19. முத்தமிழுக்குப் பண்டிதன் | - | ஈ) நாயக்கர் |
| 20. சதகம் | - | உ) இராசராசன் |

**இரண்டாம் பாகம்**

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக: 5 x 4 = 20**

21. அ. இலக்கிய வகைகளை விளக்குக.

**அல்லது**

ஆ. சிற்றிலக்கியத்தின் தொன்மைக் கருத்துருவாக்கத்தினை விவரி.

22. அ. குமரகுருபரரின் பெருமைகளை எடுத்துரைக்க.

**அல்லது**

ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடும் சித்தாந்த உண்மைகளை எடுத்தியம்புக.

23. அ. சிங்கனின் தோற்றப் பொலிவினை குறவஞ்சி வழிநின்று விளக்குக.

**அல்லது**

ஆ. கலிங்கத்துப் பரணியில் பேய்கள் அழைக்கும் விதத்தினை எழுதுக.

24. அ. தமிழின் பிறப்பு, வளர்ப்பு முறைகளாகத் தமிழ்விடுதூது கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

ஆ. இரண்டாம் இராசராசனின் சிறப்பினைக் குறிப்பிடுக.

25. அ. சதக இலக்கியத்தின் இயல்புகளை எடுத்துரைக்க.

**அல்லது**

ஆ. தண்டலையார் சதகம் குறிப்பிடும் வாழ்வியல் நெறிகளை விளக்குக.

## மூன்றாம் பாகம்

**எவையேனும் நான்கனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக:**

**4 x 15 = 60**

26. சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துத் தொகுத்தெழுதுக.

27. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் அக, புறப்பொருள் பற்றிய செய்திகளை விவரி.

28. சிங்கியைத் தேடி அலைந்து காணாமல் வருந்தும் சிங்கனின் நிலையினைச் சித்திரிக்க.

29. இராசராசன் உலா வரும்போது நடந்த நிகழ்வினைத் தொகுத்துரைக்க.

30. தண்டலையார் சதகம் குறிப்பிடும் பக்தி நெறியினை விளக்குக.

*************